## பள்ளி

### மாவட்ட / மாநில அளவில்
### 11,12ஆம் வகுப்பு பயிலும் பள்ளி மாணவர்களிடையே
### கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகள் நடத்துவதற்கான விதிமுறைகள்

1. 11,12ஆம் வகுப்பு மாணவர்கள் மட்டுமே கலந்துகொள்ள வேண்டும். ஒரு பள்ளியிலிருந்து ஒரு போட்டிக்கு ஒரு மாணவர் வீதம் மொத்தம் 3 பேரை மட்டும் தெரிவு செய்து இதனுடன் உள்ள படிவத்தில் நிறைவு செய்து மாணவர்களைத் தலைமையாசிரியர் அனுப்ப வேண்டும். மாணவர்கள் போட்டி நாளன்று காலை 9 மணிக்குள் வருகையைப் பதிவு செய்திடல் வேண்டும். பேச்சுப் போட்டியில் கலந்துகொள்ள 15 பேருக்கு மேல் மாணவர்கள் வரும் நேர்வில் முதல் சுற்றுப் பேச்சுப் போட்டி நடத்தப்பெற வேண்டும். முதல் சுற்றில் அதிக மதிப்பெண் பெறும் முதல் ஆறு மாணவர்கள் இறுதிச் சுற்றில் கலந்து கொள்வர். போட்டிகளில் கலந்து கொள்ள வருகைத் தந்த மாணவர்களின் வருகைப் பதிவேட்டின் ஒளிப்படியினை தமிழ் வளர்ச்சி இயக்குநருக்கு அனுப்ப வேண்டும்.

2. போட்டியில் கலந்து கொள்ளும் மாணவர்கள் அந்தந்தப் பள்ளி தலைமை ஆசிரியரிடமிருந்து இணைப்பில் உள்ள படிவத்தை நிறைவு செய்து, போட்டி தொடங்கும் முன்பு தமிழ் வளர்ச்சி உதவி இயக்குநர் அவர்களிடம் கொடுத்திடல் வேண்டும்.

3. மூன்று போட்டிகளையும் தமிழ் வளர்ச்சி இயக்குநரால் குறிப்பிடப் பெற்ற நாள்களில் நடத்தி முடிக்க வேண்டும். மூன்று போட்டிகளையும் ஒரே நாளில் நடத்தி அன்றே முடிவு அறிவிக்கப்பெற வேண்டும். மூன்று போட்டிகளிலும் ஒரே மாணவர் கலந்துகொள்வதாக இருந்தாலும், வாய்ப்பளிக்கும் வகையில் நேரத்தை அமைத்துக் கொள்ளலாம். போட்டிகள் காலை10.00 மணிக்குத் தொடங்கப்பட வேண்டும்.

4. போட்டிகள் மாவட்டத் தலைமையிடத்தில் நடத்தப்பெற வேண்டும்.

5. **அ. மாவட்ட அளவிலானப் பரிசுத் தொகை :–**

| | | முதல் பரிசு | இரண்டாம் பரிசு | மூன்றாம் பரிசு |
|---|---|---|---|---|
| கவிதைப் போட்டி | – | ரூ.10,000/– | ரூ.7,000/– | ரூ.5,000/– |
| கட்டுரைப் போட்டி | – | ரூ.10,000/– | ரூ.7,000/– | ரூ.5,000/– |
| பேச்சுப் போட்டி | – | ரூ.10,000/– | ரூ.7,000/– | ரூ.5,000/– |

**ஆ. மாநில அளவிலானப் பரிசுத் தொகை :–**

| | | முதல் பரிசு | இரண்டாம் பரிசு | மூன்றாம் பரிசு |
|---|---|---|---|---|
| கவிதைப் போட்டி | – | ரூ.15,000/– | ரூ.12,000/– | ரூ.10,000/– |
| கட்டுரைப் போட்டி | – | ரூ.15,000/– | ரூ.12,000/– | ரூ.10,000/– |
| பேச்சுப் போட்டி | – | ரூ.15,000/– | ரூ.12,000/– | ரூ.10,000/– |

6. அரசாணை (நிலை) எண்.274, தமிழ் வளர்ச்சி பண்பாடு மற்றும் அறநிலையத் (தவ1–1) துறை, நாள்: 2.12.2002இன்படி போட்டிகள் நடத்தப்பெற வேண்டும்.

7. பொது மக்களும் மாணவர்களும் அறிந்திடும் வகையில் தகவல் தொடர்பு ஊடகங்கள் வழியே போட்டி நடைபெறும் இடம், நாள் குறித்த செய்திகளைத் தர வேண்டும்.

8. முதன்மைக் கல்வி அலுவலர் வழியாக அனைத்துப் பள்ளிகளுக்கும் சுற்றறிக்கை அனுப்பப்பெற வேண்டும்.

9. பள்ளித் தலைமையாசிரியர்களுக்குப் போட்டி விதிமுறைகள் தெரிவிக்கப்பெற வேண்டும்.

10. போட்டி நடக்கும் அன்றே முடிவுகள் அறிவிக்கப்பெற வேண்டும். பரிசுத் தொகை தமிழ் வளர்ச்சித் துறை நடத்துகின்ற அரசு விழாவில் வழங்கப்படும்.

11. வெற்றி பெறும் மாணவர்களின் எண்ணிக்கை மாவட்டத்திற்கு ஆறு என்பதால் பாராட்டுச் சான்றிதழ்கள் போட்டிகளுக்கு ஏற்ற வகையில் கணினியில் தயாரிக்கப்பெற வேண்டும்.

12. பாராட்டுச் சான்றிதழில் தமிழ் வளர்ச்சி இயக்குநர், மாவட்டத் தமிழ் வளர்ச்சி உதவி இயக்குநர் ஆகியோரது ஒப்பங்கள் இடம் பெற வேண்டும்.

13. கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகளுக்கான தலைப்புகள் தமிழ் வளர்ச்சி இயக்ககத்திலிருந்து முத்திரையிட்ட உறையில் அனுப்பப்பெறும்.

14. போட்டிகளுக்கான தலைப்புகள், பங்கேற்கும் மாணவர்களுக்கு முன்னதாகவே தெரிவிக்கப்படக்கூடாது. நடுவர்கள் மற்றும் மாணவர்கள் முன்னிலையில் போட்டி நடைபெறும் நேரத்தின் தொடக்கத்தில் தமிழ் வளர்ச்சி இயக்ககம் அனுப்பிய உறை பிரிக்கப்பட்டுத் தலைப்பு மாணவர்களுக்குத் தெரிவிக்கப்பெற வேண்டும். அட்டைப் பெட்டிக்குள் வைக்கப்பட்டிருக்கும் பேச்சுப் போட்டிக்கான தலைப்புகளில் ஒன்றைத்

    தெரிவு செய்து மாணவர் அத்தலைப்பிலேயே பேச வேண்டும். பேசுவதற்குப் பத்து நிமிடங்களுக்கு முன்னர் பேசப்போகிற மாணவர் தலைப்பினைத் தெரிந்து கொள்ளும் வகையில் போட்டி நடைமுறைகள் அமைத்துக் கொள்ளப்பெற வேண்டும்.

15. போட்டிகளை நடத்துவதற்கென ஒவ்வொரு மாவட்டத்திற்கும் சில்லறைச் செலவினமாக ரூ.10,000/– ஒதுக்கீடு செய்யப்பெற்றுள்ளது. இத்தொகை பின்வரும் செலவினங்களுக்குப் பயன்படுத்திக் கொள்ளப்பட வேண்டும்.

அ) நடுவர் ஒவ்வொருவருக்கும் மதிப்பூதியம் போக்குவரத்துப்படி உட்பட ரூ.200/– வீதம் வழங்கப்படலாம்.

ஆ) போட்டியில் கலந்து கொள்ளும் மாணவர்களுக்கு வெள்ளைத்தாள் வழங்குதல் போன்ற எழுதுபொருள் செலவினங்களை மேற்கொள்ளலாம்.

இ) போட்டியில் கலந்துகொள்ளும் நடுவர்கள், மாணவர்கள் மற்றும் உதவிப் புரிவோர் ஆகியோருக்கு மதிய உணவு, தேநீர் வழங்கப்பெறலாம்.

ஈ) சான்றிதழ்கள் தரமான அட்டையில் கணினியச்சு செய்து வழங்கப்பெற வேண்டும்

16. ஒதுக்கீடு செய்யப்பெற்ற தொகைக்குள் செலவினங்கள் அமைதல் வேண்டும்.

17. அரசாணையில் தெரிவித்துள்ளபடி, மண்டிலத் தமிழ் வளர்ச்சித் துணை இயக்குநர்கள் மாவட்டத் தமிழ் வளர்ச்சி உதவி இயக்குநர்கள் உரிய தொகையை முன்பணமாகப் பெற்று பின்னர் போட்டிகள் முடிவுற்ற 15 நாட்களுக்குள் செலவினப்பட்டியை கருவூலத்தில் அளித்து பட்டியை நேர்செய்த விவரத்தை உடன் அனுப்ப வேண்டும். மீதித் தொகையிருந்தால் ஒப்பளிக்கப்பட்ட கணக்குத் தலைப்பில் அரசு கணக்கில் உடன் திருப்பிச் செலுத்த வேண்டும். இவ்விவரத்தைத் தமிழ் வளர்ச்சி இயக்குநருக்கு உடன் தெரிவிக்கப்பெற வேண்டும்.

மாவட்ட அளவிலான போட்டிகள் சிறப்புற நடைபெற தகுதி வாய்ந்த மாணவ, மாணவியர்களைத் தெரிவு செய்து போட்டி நடைபெறும் நாளன்று தவறாது அனுப்பி வைக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

# இணைப்பு – 2

## தமிழ் வளர்ச்சித் துறை

## பள்ளிப் போட்டி

## கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டியில் கலந்துகொள்வதற்கான படிவம்

**மாவட்டம் ------------------------------**

1. மாணவரின் பெயர் (தமிழ்) :
2. பிறந்த நாள் / வயது :
3. பயிலும் பள்ளி (தொலைபேசி எண்ணுடன்) :
4. பயிலும் பாடப்பிரிவு :
5. பயிலும் ஆண்டு :
6. இல்ல முகவரி / தொலைபேசி எண் :
7. கலந்து கொள்ளும் போட்டி (கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டி) :
8. மாணவரின் மாதிரி ஒப்பம் : 1)

2)

**பரிந்துரை**

இப்பள்ளியில் பயிலும் செல்வன் / செல்வி ------------------------------ தமிழ் வளர்ச்சித் துறையால் நடத்தப்பெறும் ------------------------------ போட்டியில் கலந்து கொள்ளப் பரிந்துரைக்கிறேன்.

தலைமை ஆசிரியர் ஒப்பம்
அலுவலக முத்திரை

நாள் :

போட்டி நடைபெறும் நாளன்று மாணவரின் ஒப்பம். ------------------------------

# இணைப்பு – 2

## தமிழ் வளர்ச்சித் துறை

## கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டியில் கலந்துகொள்வதற்கான படிவம்

**மாவட்டம் ------------------------------**

1. மாணவரின் பெயர் (தமிழ்) :
2. பிறந்த நாள் / வயது :
3. பயிலும் கல்லூரி (தொலைபேசி எண்ணுடன்) :
4. பயிலும் பாடப்பிரிவு :
5. பயிலும் ஆண்டு :
6. இல்ல முகவரி / தொலைபேசி எண் :
7. கலந்து கொள்ளும் போட்டி (கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டி) :
8. மாணவரின் மாதிரி ஒப்பம் : 1)

   2)

**பரிந்துரை**

இக்கல்லூரியில் பயிலும் செல்வன் / செல்வி -------------------------- தமிழ் வளர்ச்சித் துறையால் நடத்தப்பெறும் ------------------------------ போட்டியில் கலந்து கொள்ளப் பரிந்துரைக்கிறேன்.

முதல்வர் ஒப்பம்
அலுவலக முத்திரை

நாள் :

போட்டி நடைபெறும் நாளன்று மாணவரின் ஒப்பம். ------------------------------